

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு காட்டாங்குளத்தூர் தெற்கு ஒன்றியம், சிங்கபெருமாள் கோயில் ஊராட்சியில் செங்கல்பட்டு தொகுதி தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் கே.பி.ராஜன் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 500 பொதுமக்களுக்கு குறு, சிறு நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறுசுவை உணவை வழங்கினார். அருகில் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், சட்டமன்ற உறுப்பினர் வரலட்சுமி மதுசூதனன், ஒன்றியச் செயலாளர் சந்தானம் உள்ளிட்டோர் உள்ளனர்.



திருவள்ளூர் மாவட்ட ஆட்சியரக மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை கூட்டரங்கில் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ராணிப்பேட்டை ஆர்.காந்தி தலைமையில் அனைத்து துறை அலுவலர்களுடனான ஆய்வு கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.ஆல்பி ஜான் வர்கீஸ் முன்னிலையில் நடைபெற்றது. உடன் சட்டமன்ற உறுப்பினர்கள் திருத்தணி எஸ்.சந்திரன், வி.ஜி.ராஜேந்திரன் ஆ.கிருஷ்ணசாமி, எஸ்.சுதர்சனம், டி.ஜெ.கோவிந்தராஜன், க.கணபதி, நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர்.கே.ஜெயக்குமார், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பா.சீபாஸ் கல்யாண், மாவட்ட வருவாய் அலுவலர் சு.அசோகன், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் கே.வி.ஜி.உமா மகேஸ்வரி, கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) / திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை செ.ஆ.ரிஷப், மாவட்ட வன அலுவலர் திரு.ராம் மோகன், சார் ஆட்சியர் செல்வி.ஐஸ்வர்யா ராமநாதன், உதவி ஆட்சியர் (பயிற்சி) செல்வி.கேத்தரின் சரண்யா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திருமதி.காயத்ரி சுப்பிரமணியன் மற்றும் பல்வேறு துறை அரசு அலுவலர்கள் உள்ளனர்

விபத்துகளின்போது மீட்புப் பணிகளை மேற்கொள்ளும்

# ரெயில்வே ஊழியர்களுக்கு சிறப்புப் பயிற்சி!

## ஒன்றிய ரெயில்வே அமைச்சருக்கு கலாநிதி வீராசாமி எம்.பி. கடிதம்!

சென்னை, ஜூன்.8-

"விபத்துகளின் போது மீட்புப் பணிகளை மேற் கொள்ளும் ரெயில்வே ஊழியர்களுக்கு சிறப்புப் பயிற்சி வழங்க வேண்டும்" என்று ஒன்றிய ரெயில்வே அமைச்சருக்கு வட சென்னை நாடாளுமன்ற கழக உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி கடிதம் எழுதியுள்ளார்.

இதுகுறித்து அவர் ஒன்றிய அமைச்சருக்கு எழுதியுள்ள கடிதம் வருமாறு :

கடும் மனவேதனையைத் தரும் இக்காலகட்டத்தில் முதலில் ஒரு இந்தியக் குடிமகனாகவும், ஒரு பாராளுமன்ற உறுப்பினர் என்னும் நிலையிலும் பல உயிர்களை இழந்தும், நூற்றுக் கணக்கானவர்கள் காயமுற்று, துயரமுடன் இருக்கும் இந்த வேளையில், கோரமண்டல் எக்ஸ்பிரஸ் மற்றும் ஹவுரா சூப்பர் பாஸ்ட் எக்ஸ்பிரஸ் விபத்தினால் நாட்டுக்கு ஏற்பட்டுள்ள இந்த பேரிடரை எண்ணி வருந்துவதுடன், இதனால் உங்களுக்கு ஏற்பட்டுள்ள துயரத்திலும் பங்கேற்கின்றேன். இதில் பயணம் செய்த பெரும்பாலானோர் சென்னைக்கு வந்த பயணிகள் என்பதை நாம் அறிவோம். மீட்புப் பணிகளில் உங்களுடன் இணைந்து பணியாற்றவும் தயாராக உள்ளேன். இவ்வி பத்தினால் பாதிக்கப்பட்ட பயணிகளுக்கு உங்களுடன் இணைந்து பணியாற்றும் வாய்ப்பு கிடைத்தாலும் செய்ய தயாராக உள்ளேன்.

வழக்கம்போல, இது போன்ற விபத்துக்கள் ஏற்படும்போது, மாநில அரசும், விபத்து ஏற்பட்ட பகுதி வாழ் கிராமங்களும் ஓடோடி வந்து முதலில் உதவிக்கரங்கள் நீட்டியுள்ளனர். இது போன்ற ஒரு சோகமான நிகழ்வு நடைபெற்றுள்ள சூழ்நிலையில், உங்கள் கவனத்தை ஒரு முக்கியமான நடைமுறை பிரச்சினையின்பால் ஈர்ப்பதற்கு, வருத்தமாகத்தான் உள்ளது. ஆனால் மக்களின் பாதுகாப்பு என்று வரும்போது, கால நேரம் பார்ப்பது சரியல்ல என்பதாலும், இதனால் கால விரயம் ஏற்படக்கூடாது என்பதாலும் எனது கருத்தைத் தங்கள் முன் வைக்கின்றேன்.

இந்த விபத்தில் பாதிக்கப்பட்டுள்ள சில பிரயாணிகள், இரயில்வே மீட்புக்குழுவினர் தாமதமாக வந்ததாக கருத்து தெரிவித்துள்ளனர். இது குறித்து நான் சொல்ல விரும்புவது யாதெனில், இது போன்ற விபத்துக்கள் ஏற்படும்போது, விரைந்து செயல்படுவது எப்படி என்று மீட்புக்குழுவினருக்கு, இரயில்வே துறையின் வழிகாட்டுதல் முறைப்படி, அவர்களுக்கு தக்க பயிற்சிகள் காலமுறைப்படி வழங்கப்பட்டுள்ளதா, என்பதை தாங்கள் ஆய்வு செய்ய வேண்டும். ஒரு வேளை இல்லையெனில், அவர்களுக்கு தக்க பயிற்சிகள் வழங்க ஆணையிட வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

இரண்டாவதாக சென்னைக்கத்தா இரயில் மார்க்கம் மிக அதிக அளவு பயன்படுத்தப் படும் மார்க்கமாகும். அதிக மக்கள் பிரயாணம் செய்வதால், இந்த மார்க்கம் ஏற்கனவே சுமார் 150% பயன்படுத்தப்படுவதாகக் கூறப்படுகிறது. அனுமதிக்கப்பட்ட அளவிற்கு மேலாக கூடுதல் அளவில் பயன்படுத்தப் படுவதால், அங்குள்ள உள்கட்டமைப்பு போதிய அளவில் தேவைக்கு ஏற்ப ஈடுகொடுப்பதில்லை எனவும் கூறப்படுகிறது. எனவே, இந்த மார்க்கத்தில் உள்ள சமிக்ஞை உட்பட்ட உள் கட்டமைப்பை உடனடியாக வலுப்படுத்தப்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கின்றேன். அதிகப்படியான பிரயாணிகள், கோரமண்டல் விரைவு இரயிலில் வருவதால், அதிகப்படியான பிரயாணிகள் முன் பதிவு செய்வதாலும், முன்பதிவு செய்யப்படாத பெட்டிகளில் அதிகமான அளவில் பிரயாணிகள் பயணிப்பதாகவும் கூறப்படுகிறது. எனவே, இந்த மார்க்கத்தில் மேலும் சில புதிய இரயில்களை விட வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கின்றேன்.

மூன்றாவதாக, போதுமான அளவில் இரயில்வே பணியாளர்களை நியமனம் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன். ஏனெனில், கடைசியாக 2018இல் இரயில்வே ஓட்டுநர்கள் பணிக்கு ஆட்கள் தேர்வு செய்யப்பட்டதாகத் தெரிகிறது. இது போல அல்லாமல், ஆண்டுதோறும் பணிக்குத் தேவையான ஆட்கள் தேர்வு செய்யப்பட வேண்டும். இதில் குறைபாடு ஏற்படுவதால், தற்போது பணியில் உள்ள வர்களுக்கு அதிக பணிச் சுமை ஏற்படுகிறது. இதனால், பணியாளர்கள் மன உளைச்சலுக்கு உள்ளாகின்றனர். இன்னும் சொல்லப்போனால் சென்னை சென்ட்ரல் இரயில் நிலையத்துக்கு அருகில் உள்ள பேசின்பிரிட்ஜ் சந்திப்பு இரயில் நிலையத்தில், கடந்த இரண்டு வருடங்களாக இரயில் நிலைய அதிகாரி, அதாவது ஸ்டேஷன் மாஸ்டர் பணியிடம் நிரப்பப்படாமல் உள்ளது.

நாள்தோறும், சென்னைக்கு வடக்கு, மேற்கு, மற்றும் கிழக்கு திசைகளில் இருந்து வரும் சுமார் 250 இரயில்கள், இந்த இரயில் நிலையத்தைக் கடந்து சென்று கொண்டிருக்கின்றன. எனவே, இது போன்று, 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை, பணியாளர்களைத் தேர்ந்தெடுக்கும் முறையை கைவிட்டு, ஆண்டுதோறும், பணியாளர்களை தேவையான அளவில் இரயில்வே துறையின் அனைத்துப் பிரிவுகளுக்கும் தேர்வு செய்யப்பட வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு கலாநிதி வீராசாமி அக்கடிதத்தில் கூறியுள்ளார்.

மணிப்பூரில் கலவரம் -

# பா.ஜ.க. நடத்தும் மிகப்பெரிய இன அழிப்பு!

## ஓய்வுபெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி சசிகாந்த் செந்தில் பரபரப்பு குற்றச்சாட்டு!

சென்னை ஜூன்.8-

மணிப்பூர் மாநில கலவரம் மூலம் பா.ஜ.க. அரசு மிகப் பெரிய இன அழிப்பை நடத்தி வருகிறது என்று முன்னாள் ஐஏஎஸ் அதிகாரி சசிகாந்த் செந்தில் பரபரப்பு குற்றச்சாட்டு கூறியுள்ளார்.

தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் முன்னணி அமைப்புகளின் ஒருங்கிணைப்பாளரும், ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரியுமான சசிகாந்த் செந்தில் சத்தியமூர்த்திபவனில் நிருபர்களிடம் கூறியதாவது:

மணிப்பூரில் ஏற்பட்ட கலவரம் இன்று வரை வெளியில் வராமல் இருக்கிறது. அங்கு ஒரு இன அழிப்பு நடந்து கொண்டிருக்கிறது. அங்கு நடப்பது முற்றிலும் மறைக்கப்படுகிறது. ஒரு மாநிலத்தில் மதவாத அரசியல் நடந்தால் என்ன நடக்கும் என்பதற்கு மணிப்பூர் கலவரம் முன்னுதாரணமாக உள்ளது. 2017 ஆம் ஆண்டு முதல் மதவாத அரசியலை பா.ஜ.க. அங்கு முன்னெடுத்துள்ளது.

பெருவாரியான பழங்குடியின மக்கள் கிறிஸ்தவர்களாக இருப்பதால் அவர்களுக்கு எதிராக ஒரு குழுவை அரசாங்கமே உருவாக்கி அவர்களுக்குள் மோதலை ஏற்படுத்தி மிகப் பெரிய இன அழிப்பை நடத்தி வருகிறது. 200க்கும் மேற்பட்ட தேவாலயங்கள் இடிக்கப்பட்டுள்ளன. இப்போது 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் காடுகளில் தஞ்சம் புகுந்திருக்கிறார்கள்.

மணிப்பூர் மக்கள், ராணுவம் மற்றும் காவல் துறை மீது வைத்திருந்த நம்பிக்கையை இழந்து விட்டனர். எனவே, பொதுமக்களே தங்கள் கையில் ஆயுதங்களை ஏந்தி போராட தொடங்கி விட்டனர். தமிழ்நாட்டில் இருந்து நெடுந்தொலைவில் இருந்தாலும் மணிப்பூர் மக்களுக்காக ஆதரவு கரம் நீட்ட வேண்டியது நமது கடமை.

மக்களுக்குள் விரோதத்தை தூண்டி விட்டு ஒருவருக்கொருவர் கொல்லும் நிலையை கொண்டுவந்து விட்டார்கள். இதை எப்படி தீர்க்க போகிறார்கள் என்பது தான் உள்துறை அமைச்சருக்கு நாங்கள் வைக்கும் கேள்வி. மணிப்பூர் மாநில அரசே, மக்களுக்கு எதிராக இருப்பதால் ராணுவத்தையும், காவல் துறையையும் கூட மக்கள் நம்புவதற்கு தயாராக இல்லை. அங்கு நடைபெறும் இனப்படு கொலையை தடுத்து நிறுத்த வேண்டும் என்பது தான் எங்கள் விருப்பம்.

அரசின் நிர்வாக திறன் இல்லாத காரணத்தால் அங்கு இன்னும் ஒரு மாத காலத்திற்குள் பெரிய அளவில் இனப்படுகொலை நடைபெறும் என தெரிகிறது. மதவாத அரசியலை அவர்கள் முன்னெடுப்பதால் தான் அரசு அதை கண்டும், காணாமல் இருக்கின்றது. மோடி அரசு வளர்ச்சி பாதையில் இருந்து விலகி மதவாத அரசியலை மட்டுமே நம்பி இருக்கிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

சீரமைப்பு பணிகள் நிறைவு - சென்னையின் அடையாளம்

# அண்ணா மேம்பாலம் - ஜூன் இறுதியில் 50 ஆம் ஆண்டு நிறைவு விழா!

## நெடுஞ்சாலைத் துறை அதிகாரி தகவல்!

சென்னை, ஜூன்.8-

சென்னையின் அடையாளமாகத் திகழும் அண்ணா மேம்பாலத்தின் 50 ஆம் ஆண்டு கொண்டாட்டம் ஜூன் இறுதியில் நடைபெறும் என நெடுஞ்சாலைத் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சென்னையின் அடையாளமாக விளங்கும் அண்ணா சாலை 400 ஆண்டுகளுக்கும் மேலாக பழமை வாய்ந்தது. இந்த சாலையானது தலைமைச்செயலகம் முதல் கிண்டி வரை 15 கி.மீ. நீளம் கொண்டது. சென்னையின் மையப் பகுதியான நுங்கம்பாக்கத்தில், அண்ணா சாலை, நுங்கம்பாக்கம் சாலை, ராதாகிருஷ்ணன் சாலை, ஜி.என். செட்டி சாலைகள் சந்திக்கும் பகுதியில் மேம்பாலம் ஒன்றை 1971 ஆம் ஆண்டு கட்ட திட்டமிடப்பட்டது.

அதற்கு ரூ.66 லட்சம் திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டது. 250 அடி நீளம், 48 அடி அகலத்தில் அமைக்க முடிவு செய்யப்பட்டது. 1969 ஆம் ஆண்டு அறிஞர் அண்ணா மறைவுக்குப் பிறகு முதலமைச்சராக பொறுப் பேற்ற கருணாநிதி இந்த மேம்பாலத்தைக் கட்ட உத்தரவிட்டார். 21 மாதத்தில் இந்த மேம்பாலம் கட்டி முடிக்கப்பட்டது. 1973 ஆம் ஆண்டு ஜூலை 1 ஆம் தேதி மேம்பாலம் திறக்கப்பட்டது. சென்னையில் எத்தனையோ மேம்பாலங்கள் அமைக்கப்பட்டாலும் அண்ணா மேம்பாலத்திற்கு எப்போதும் தனிச்சிறப்பு உண்டு. இதனை அன்றைய காலத்தில் ஜெமினி மேம்பாலம் என்று அழைத்தது உண்டு.

சென்னையில் கட்டப்பட்ட முதல் மேம்பாலம் இதுதான். இந்திய அளவில் மூன்றாவதாக கட்டப்பட்ட மேம்பாலம் என்ற சிறப்புக்கும் உரியது. இது தென்கிழக்கு ஆசியாவின் முதல் மேம்பாலம் ஆகும். இந்நிலையில் திரைப்படங்களில் சென்னை அண்ணா சாலையை தவிர்த்து காட்சிகளை அமைக்க முடியாது என்று சொல்லும் அளவிற்கு, பெரும்பாலான திரைப்படங்களில் இந்த பாலம் வரும். அண்ணா சாலையில் இருந்து மயிலாப்பூர், நுங்கம்பாக்கம், தி.நகர், கிண்டி, பாரிமுனை செல்வதற்கு வசதியாக 5 முனை சாலை சந்திப்பில் இந்த மேம்பாலம் அமைந்துள்ளது.

இந்த மேம்பாலம் 600 மீட்டர் நீளம் கொண்டது. அந்த மேம்பாலம் கட்டிய போது தினமும் அந்த வழியாக 20 ஆயிரம் வாகனங்கள் சென்றன. தற்போது வாகனங்களின் எண்ணிக்கை 3 லட்சமாக அதிகரித்துள்ளது. இந்த மேம்பாலத்தின் அருகில் அப்போது ஜெமினி ஸ்டூடியோ இருந்தது. எனவே ஜெமினி மேம்பாலம் என்றும் அழைக்கப்பட்டது. அறிஞர் அண்ணாவின் மறைவுக்குப் பிறகு இந்த மேம்பாலத்துக்கு அண்ணா மேம்பாலம் என்று பெயர் சூட்டப்பட்டது. மேலும், குதிரைப் பந்தயம் தடை செய்ததை நினைவுகூரும் வகையில் பாலத்தின் கீழே குதிரையைக் கட்டுப்படுத்தும் மனிதன் சிலை உள்ளது. இத்தகைய சிறப்பு மிக்க அண்ணா மேம்பாலம் கட்டப்பட்டு 50 ஆண்டுகள் முடிவடைய உள்ளது.

இந்நிலையில் அண்ணா மேம்பாலத்தை சிஆர்ஐடிபி 202122 ஆம் திட்டத்தின் கீழ் ரூ.8.85 கோடியில் சீரமைக்கப்படும் என பொதுப் பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு தெரிவித்திருந்தார். அதன்படி இந்த மேம்பாலத்தை வலுப்படுத்தி அழகுபடுத்தி புதுப்பிக்கும் பணிகளை நெடுஞ்சாலைத் துறையினர் தொடங்கியுள்ளனர். இதற்காக அரசு சார்பில் ரூ.8.85 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த மேம்பாலத்தில் உள்ள 97 தூண்களும் நவீன ரெடிமேட் கான்கிரீட் மூலம் வலுப்படுத்தப்பட்டுள்ளது. அதன்படி, இப்பாலத்தின் தூண்களை ஜிஆர்சி பேனல்கள் கொண்டு மறுவடிவமைப்பு செய்யவும், இப்பாலத்தின் கீழே பொலிவூட்டும் வகையில் பசுமைச் செடிவகைகள் அமைக்கப்படுகிறது. பொது மக்கள் நடந்து செல்ல ஏதுவாக நடைபாதைகள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதுகுறித்து நெடுஞ்சாலைத்துறை அதிகாரி ஒருவர் கூறுகையில் :

அண்ணா மேம்பாலத்தை புதுப்பிக்கும் பணிகள் முடிவடைந்துள்ளது. இது பழமை மாறாமல் பணிகள் நடைபெற்று வருகிறது. மேலும் பாலத்தின் திட்டமிடப்பட்ட பணிகள் அனைத்தும் முடிவடைந்தது. மேம்பாலம் 50 ஆண்டு விழா கொண்டாடப்படும் தேதி அறிவிக்கப்படும் தேதிக்கு 5 நாட்களுக்கு முன்பு மேம்பாலத்திற்கு வண்ணம் பூசப்படும். அதாவது, பாலத்திற்கு பயன்படுத்தப்படும் பெயின்டானது தூசு, துகள்களை படியவிடாமல், பழமை மாறாமல் இருக்கும் அளவிற்கு பயன்படுத்தப்பட உள்ளது. மேம்பாலத்தின் அருகே புல்தரைகளில் பொதுமக்கள் பார்க்கும் வகையில் அழகிய தமிழ் எழுத்துக்கள் அமைக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. பேரறிஞர் அண்ணா, கருணாநிதி ஆகியோரது பொன்மொழிகளும் தூண்களில் செதுக்கப்பட உள்ளது.

இதனிடையே, மேம்பாலத்துக்கு அருகில் அமெரிக்கத் துணைத் தூதரகம் அமைந்துள்ளது. இந்த தூதரகத்திற்கு விசா பெற வரும் மக்கள் சாலையின் நடைபாதையில் நிற்பது வழக்கமான ஒன்று. இதில் பெண்களும் மணிக்கணக்காக நிற்கின்றனர். இவர்கள் கழிவறை செல்ல வேண்டும் என்றால் அருகில் உள்ள ஆக்ஸ்போர்ட்டு பள்ளியின் கழிவறையைப் பயன்படுத்தி வருகின்றனர்.

இதனைக் கருத்தில் கொண்டு மேம்பாலம் இறக்கத்தில் அமர்வதற்கான நிலையம் மற்றும் கழிவறை கட்டப்பட உள்ளது. இதனை திட்டத்தின் ஒரு பகுதியாக சேர்க்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

விபத்து தடுப்புக்கான நிதி

# ரூ.943 கோடியில் ஒரு பைசாவை கூட செலவிடாத தென்கிழக்கு ரயில்வே!

## பயணிகள் பாதுகாப்பில் மோடி அரசின் அலட்சியம்!

புவனேஷ்வர், ஜூன் 8

விபத்து தடுப்புக்கான நிதி ரூ. 943 கோடியில், தென்கிழக்கு ரயில்வே ஒரு பைசாவைக் கூட செலவிடாதது வெளிச்சத்திற்கு வந்துள்ளது. 278 பேரைப் பலி கொண்ட ஒடிசா ரயில் விபத்திற்கான காரணத்தை, ரயில்வே இது வரை அதிகாரப்பூர்வமாக அறிவிக்கவில்லை.

இந்த விபத்துக்கு தொழில்நுட்ப கோளாறு காரணமா? அல்லது மனிதத் தவறு காரணமா? என பல்வேறு கோணங்களிலும் விசாரணை நடத்தப்பட்டு வருவதாக ரயில்வே தெரிவித் துள்ளது. கோரமண்டல் எக்ஸ்பிரஸ் ரயிலுக்கு கிரீன் சிக்னல் கிடைத்ததாலேயே, லோகோ பைலட் சரக்கு ரயில் நின்ற வழித்தடத்தில் ரயிலை இயக்கியதாகவும், மின்னணு இண்டர்லாக் கிங் சிஸ்டத்தில் ஏற்பட்ட மாற்றம் காரணமாகவே இந்த விபத்து நடந்து இருப்பதாகவும் ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ் ணவ் தெரிவித்தார்.

கடைசியாக, இந்த விபத்துக்கு ஏதேனும் நாச வேலை காரணமாக இருக்கலாம் என்ற தங்களின் வழக்கமான குற்றச்சாட்டை, காரணமாக முன்வைத்துள்ள ஒன்றிய பா.ஜ.க. அரசு, ரயில்வே பரிந்துரை என்ற பெயரில், சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளது.

ரயில்கள் மோதிக்கொள்வதைத் தடுப்பதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட 'கவச்' தொழில் நுட்பம், ஷாலிமர் சென்னை கோர மண்டல் எக்ஸ்பிரஸ் வழித்தடத்தில் அமைக்கப்படாதது, ஏன்? என்ற எதிர்க்கட்சிகளின் கேள்விக்கு இப்போதுவரை மோடி அரசால் பதிலளிக்க முடியவில்லை.

குறிப்பாக கடந்த 3 மாதங்களுக்கு முன்பே சிக்னல் அமைப்பில் குளறுபடிகள் இருப்பதைச் சுட்டிக்காட்டி தென்மேற்கு ரயில்வே தலைமை செயல்பாட்டு மேலாளர் இந்திய ரயில்வேக்கு கடிதம் எழுதியதாகவும் இது குறித்து ரயில்வே நிர்வாகம் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்ற குற்றச்சாட்டிற்கும் மோடி அரசிடம் பதில் இல்லை. விபத்து பாதுகாப்பு தொழில்நுட்பங்களை அமைக்க, ஒரு வேளை அரசிடம் போதிய நிதி இல்லை; அல்லது ரயில்வேக்கு ஒதுக்கப்படவில்லை என்று கூட அவர்கள் காரணம் கூறலாம். ஆனால், அவ்வாறும் கூறி, மோடி அரசால் தப்பிக்க முடியாது என்ற உண்மை தற்போது தெரியவந்துள்ளது.

அதாவது, விபத்து தடுப்பு பாதுகாப்பு அமைப்பான ஆண்டி கொலிஷன் சிஸ்டத்திற் காக ஒதுக்கப்பட்ட ரூ. 943 கோடி ரூபாய் நிதியில், ஒரு பைசாவைக் கூட, கடந்த 3 ஆண்டுகளில் தென்கிழக்கு ரயில்வே செலவு செய்யவில்லை என்பது அம்பலமாகி இருக்கிறது. தென்கிழக்கு ரயில்வேயின் செலவினக் கணக்குப் புத்தகங்களில் உள்ள தரவுகள் மூலம் இந்த தகவல் வெளிச்சத்திற்கு வந்துள்ளது. ஒடிசா ரயில் விபத்து நடைபெற்ற பாலசோர், இந்த தென்கிழக்கு ரயில்வே மண்டலத்திற்குள் தான் வருகிறது என்பதும் இங்கு குறிப்பி டத்தக்கதாகும்.

எனவே, பயணிகள் பாதுகாப்பு விவகாரத்தில், மோடி அரசின் தலைமையிலான ரயில்வே காட்டிவந்த அலட்சியமே, ஒடிசா ரயில் விபத்து மற்றும் அதில் 278 பேர் பலியானதற்கு காரணம் என்று குற்றச்சாட்டு மீண்டும் வலுவடைந்துள்ளது.



திருவள்ளூர் மாவட்டம், ஆவடி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ரூ3.72 கோடி மதிப்பீட்டிலான 14 சுகாதார மையக் கட்டிடம் மற்றும் ஒரு சுகாதார ஆய்வக கட்டிடம் உட்பட மாநிலம் முழுவதும்முதற்கட்டமாக மொத்தம் ரூ 125 கோடி மதிப்பீட்டில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள 500 நகர்ப்புற நலவாழ்வு மையங்களை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காணொலி காட்சி வாயிலாக திறந்து வைத்ததை தொடர்ந்து, ஆவடி மாநகராட்சி, திருமுல்லைவாயல் பகுதியில் உள்ள நகர்ப்புற நல வாழ்வு மையத்தை மாவட்டச் செயலாளரும் முன்னாள் அமைச்சருமான சா.மு.நாசர் எம்.எல்.ஏ பொதுமக்கள் பயன்பாட்டிற்கு துவக்கி வைத்து இனிப்புகளை வழங்கினார் உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.ஆல்பி ஜான் வர்கீஸ், ஆவடி மாநகராட்சி மேயர் கு.உதயகுமார், ஆவடி மாநகராட்சி ஆணையாளர் தர்பகராஜ் இணை இயக்குநர் மரு.சதீஷ், துணை இயக்குநர்கள் மரு.ஜவஹர்லால், மரு.செந்தில், மாநகர பொறுப்பாளர் சன்பிரகாஷ், மண்டல குழு தலைவர்கள் அமுதா பேபிசேகர், ஜி. ராஜேந்திரன், ஜி.நாராயண பிரசாத், பொன்.விஜயன், மாநகர நல அலுவலர் மரு.யாழினி, உள்ளாட்சி பிரதிநிதிகள், மருத்துவர்கள், செவிலியர்கள், பொதுமக்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளனர்.


முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா!

**சிவகங்கை மாவட்டத்தில் பொதுக்கூட்டங்கள்!**

அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் அறிவிப்பு



முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு சிவகங்கை மாவட்டத்தில் முதற்கட்டமாக நடைபெற உள்ள பொதுக்கூட்டங்களின் பட்டியல் வருமாறு :-

நாள் சிறப்பு பேச்சாளர் இடம் வருமாறு;

17.06.2023 - திண்டுக்கல் I.லியோனி - சருகனி தேவகோட்டை தெற்கு ஒன்றியம்

18.06.2023 - திண்டுக்கல் I.லியோனி - மறவமங்கலம் காளையார்கோவில் தெற்கு ஒன்றியம்

25.06.2023 - வழக்கறிஞர் ராஜிவ்காந்தி - தேவகோட்டை நகரம்

26.06.2023 - வழக்கறிஞர் ராஜிவ்காந்தி - திருப்பத்தூர் பேரூர் (கூட்ட ஏற்பாடு மாவட்ட மாணவரணி)

27.06.2023 - சரத்பாலா - காளையார்கோவில் வடக்கு ஒன்றியம்

28.06.2023 - தக்கோலம் தேவபாலன் - இளையான்குடி கிழக்கு ஒன்றியம்

29.06.2023 தக்கோலம் தேவபாலன் இளையான்குடி தெற்கு ஒன்றியம்

30.06.2023 - சரத்பாலா - தேவகோட்டை வடக்கு ஒன்றியம்

01.07.2023 - குடியாத்தம் புவியரசி - காரைக்குடி நகர் (கூட்ட ஏற்பாடு மாவட்ட மகளிர் மற்றும் மகளிர் தொண்டரணி)

02.07.2023 - குடியாத்தம் புவியரசி - கல்லல் மேற்கு ஒன்றியம்

15.07.2023 திண்டுக்கல் I.லியோனி - எஸ்.புதூர் ஒன்றியம்

16.07.2023 - திண்டுக்கல் ஐ.லியோனி - பள்ளத்தூர் பேரூர் கழகம்

**அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன்**

செயலாளர் - சிவகங்கை மாவட்ட தி.மு.க.